2021 பிப்ரவரி 5]

அறிக்கைகளையெல்லாம் பெற்று, அதனடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்து, அதன் பிறகுதான் நாம் அதை நிறைவேற்ற முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அரசு நிச்சயமாக ஏற்று, ஆய்வு செய்து, பரிசீலித்து, அதனடிப்படையில் நிறைவேற்றும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***76662—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் தொகுதி, குந்தா வட்டம், மஞ்சூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உதகமண்டலம் தொகுதி, குந்தா வட்டம், மஞ்சூரில் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS